www.tamilarangam.net

# தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

# Thamil Eelam Liberation Organization

TELO

தமிழ் ஈழத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய எமது தலைவர் சிறீ சபாரத்தினம் அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் (LTTE) 6—5—1986 இல் மிகவும் இழிவுத்தனமான முறையில் சுட்டுக்கொல்லப்பட்டார் என்ற செய்தியை நாம் உறுதிப்படுத்துகின்றோம்.

தமிழ் ஈழ விடுதலைக்கு முதல் முதலில் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த இயக்கம் எமது தமிழ் ஈழ விடுதலை இயக்கமாகும். தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தோற்றத்தின் பின்பு தான் ஏனைய இயக்கங்கள் உருவாகியமை இங்கு குறிப்பிடத்தக்கது. விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகர்த்தாக்களான தங்கத்துரை, குட்டிமணி ஜெகன் போன்றோர் சிங்கள வெறியர்களினால் 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் வெலிக்கடைச் சிறையில் படுகொலை செய்யப்பட்டபோது தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தை வழிநடாத்தும் தலைமைப் பொறுப்பை சிறீ சபாரத்தினம் அவர்கள் ஏற்று தனது கடுமையான உழைப்பாலும் விவேகத்தினாலும் மக்களின் பேராதரவைப் பெற்று இயக்கத்தினைப் பாரிய அளவில் கட்டி வளர்த்தார்.

களத்தில் சிறீ சபாரத்தினம் அவர்கள் முன்னின்று நடாத்திய சாவகச்சேரி போலீஸ் நிலையத் தாக்குதல், 29 சிங்களக் கூலிப்படையினரை அழித்த முறிகண்டி ரயில் தாக்குதல் போன்றவற்றால் ஈழப் போராட்டத்தில் புதிய திருப்பு முனையை ஏற்படுத்தி சர்வதேச அரங்கில் ஈழப் போராட்டத்திற்கு ஆதரவு தேடியதோடல்லாமல் சிங்கள அரசை நடுநடுங்க வைத்ததுடன் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு அரணாகவும் விளங்கினார்.

எமது 'டெலோ' இயக்கத்தின் ஆற்றல் வாய்ந்த வளர்ச்சியினை மனம் பொறுக்க முடியாத LTTE இனர் எமது தலைவர் சிறீ சபாரத்தினம் உயிரைக் குடிக்க மேற்கொண்ட பல சதித் திட்டங்கள் எம்மால் ஏற்கனவே முறியடிக்கப்பட்டன. ஆனால் கூட இருந்தே கொல்லும் நோய்போல், தமது ஆரம்பகாலப் பயிற்சியை எமது முகாமில் போராளிகள் மேற்கொண்டிருந்த வேளையிலும், நிராயுதபாணிகளாக அவர்கள் உணவருந்திக்கொண்டிருக்கும்போதும் முகாமைச் சுற்றி வளைத்த LTTE இனர் ஏவுகணைகள் மூலமாகவும், இயந்திரத் துப்பாக்கிகளினாலும் கொலை செய்ததுடன் முகாமையும் சேதப்படுத்தினர் இவர்களின் இந்த இழிவான தாக்குதலினால் யாழ்ப்பாணப் பகுதி முழுவதையும் சுடுகாடு போல் ஆக்கினர். 'டெலோ' வின் ஆதரவாளர்கள் என்ற ஒரேயொரு காரணத்திற்காக மாத்திரம் நூற்றுக்கதிகமான பெண்களும் குழந்தைகளுமுட்படப் பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் அவர்களின் வீடுகளையும் குண்டு வைத்துத் தகர்த்துள்ளனர். யாழ்ப்பாணத்திலும் அதன் சுற்றாடலிலும் வியாபாரிகளின் கடைகளைத் திறக்க முடியாமல் செய்ததுடன் பொதுமக்களையும் வீட்டுக்காவலில் வைத்த வேளையில், பச்சிளம் பிள்ளைக்குப் பால் வாங்கச் சென்ற சிறுவனைக் கூடச் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள்.

தமிழ் ஈழப் பிரச்சனையில் இந்திய மக்கள் அனைவரும் ஒருமுகமாகத் திரும்பும் இந்த வேளையில், குறிப்பாக, கடந்த 4– 5– 86 இல் மதுரையில் நடைபெற்ற ஈழத் தமிழர் பாதுகாப்பு மகாநாட்டின் ஆலோசனைக் கூட்டத்தில் அகில இந்தியத் தலைவர்கள் முன்னிலையில், "இனிமேல் நாங்கள் ஒற்றுமையாக இருப்போம், ஒற்றுபட்டு எமது போராட்டத்தை முன்னெடுப்போம்" என்று உறுதி மொழி எடுத்துக்கொண்ட LTTE இனர், அடுத்த 48 மணித்தியாலங்களுள் சக விடுதலை இயக்கமான 'டெலோ' தலைவரையும் போராளிகளையும் கொலை செய்தமை, இவர்களின் சர்வாதிகாரப் போக்கின் ஓர் அங்கமேயாகும் தமிழ் ஈழத்தில் வன்முறையை நிறுத்திவிட்டோம் என்று தமிழகம் முழுவதும் பொய்ப்பிரச்சாரம் செய்யும் அதே நேரத்தில் தமிழ் ஈழத்தில் தங்களது அடாவடித்தனங்களைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள்.

எமது தலைவர் சிறீ சபாரத்தினம் அவர்களைச் சுட்டுக்கொன்று விட்டோம் என்று தமிழ் ஈழத்தில் ஒலிபெருக்கி மூலம் அறிவித்துக்கொண்டிருக்கும் அதே வேளையில் தமிழகத்தில் இச்சம்பவத்துக்கும் தமக்கும் தொடர்பில்லையென மறுத்தும் LTTE இனர் அறிக்கை விடுத்துள்ளனர். தங்களின் இந்த இழிசெயலுக்கு எதிராகத் திரண்டெழுந்த தமிழ் ஈழ மக்களின் முகம் கொடுக்க முடியாத இவர்கள் ஏற்கனவே திட்டமிட்டபடி, தங்களால் தமிழ் ஈழத்தின் பல பாகங்களிலும் பரவலாகக் கொள்ளையிடப்பட்ட வாகனங்களையும் பொருட்களையும் பொது இடத்தில் பார்வைக்கு வைத்து இப்பொருட்கள் 'டெலோ' முகாம்களில் கைப்பற்றப்பட்டவை என்றும் அறிவித்துள்ளனர் தவிர ஒலிபெருக்கி மூலம், எமது 'டெலோ' போராளிகள் அனைவரையும் கைது செய்ததாகவும், 'டெலோ' இயக்கத்தை ஒழித்து விட்டதாகவும் கூறியுள்ளனர். ஒரு தலைவனை அழிப்பதன் மூலம் ஒரு இயக்கத்தையே அழித்துவிடலாம் அல்லது அழிந்து விடும் என்று இவர்கள் நம்புவார்களேயானால் அவர்கள் விடுதலைப் போராட்ட வரலாறுகளை உணரவில்லையென்பதே உண்மையாகும்.

LTTE இனர் தங்களது சதிச் செயல்களால் 'டெலோ' இயக்கத்தை அழித்து விட்டதாக நினைத்தால், அது "கடல் வற்றும்; கருவாடு தின்னலாம்" எனக் காத்திருந்த கொக்கின் நிலையாகத்தான் முடியும். இந்த நிமிடத்தில் கூட, பல்லாயிரக்கணக்கான 'டெலோ' போராளிகள், பிரதேசத் தளபதியின் கட்டுப்பாட்டின் கீழ் சிங்கள கூலிப் பட்டாளத்துக்கெதிரான தாக்குதலை மேற்கொள்ளத் தாயார் நிலையில் செயலாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

இந்த வேளையில், LTTE இனரால் காயமடைந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ள எமது மூத்த போராளிகளில் ஒருவரான மோகன் என்பவரை உடனடியாக எம்மிடம் LTTE இனர் ஒப்படைத்தல் வேண்டும்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் ஆரம்பகர்த்தா, தேசபிதா தங்கத்துரை அவர்கள் கூறியதுபோல "உண்மைக்கு மேடையோ அன்றி வெளிச்சமோ போட்டுக்காட்ட வேண்டியதில்லை; அது வெளிவருவதை யாராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது." இன்னும் பல்லாயிரக் கணக்கான 'டெலோ' போராளிகள் எமது தலைவர்கள் விட்டுச்சென்ற பாதையில் எமது மக்களின் உரிமைகளை மீட்டு எடுக்கும் இலட்சியப் பணியை, உங்கள் அனைவரின் ஆதரவுடன், நிறைவேற்றுவார்கள் என்பதை மிக உறுதியுடன் கூறுகிறோம்.

அனைத்துத் தமிழ் மக்களினதும் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய எமது தலைவர் சிறீ சபாரத்தினம் அவர்களின் மறைவிற்கு பாத்திரமான LTTE யினரை மக்கள் நிராகரித்து, அவர்களின் விஷமப் பொய்ப் பிரச்சாரங்களை நம்பாமல் தமிழ் ஈழப் போராட்டப் பாதையில், தங்களது பங்களிப்பை தொடர்ந்து நல்குமாறும் வேண்டிக்கொள்கிறோம்.

A. செல்வம்

இராணுவத் தளபதி

8 - 5 - 1986

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

THAMIL EELAM LIBERATION ORGANIZATION

T. E. L. O.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்